# நிதித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

### மானியக் கோரிக்கை எண். 16


## முனைவர் பழனிவேல் தியாக ராஜன்
**நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | 1 |
| 2 | கருவூலக் கணக்குத் துறை | 12 |
| 3 | அரசு தகவல் தொகுப்பு விவர மையம் | 21 |
| 4 | உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை | 34 |
| 5 | கூட்டுறவு தணிக்கைத் துறை | 56 |
| 6 | மாநில அரசுத் தணிக்கைத் துறை | 65 |
| 7 | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை | 77 |
| 8 | சிறு சேமிப்புத் துறை | 87 |
| 9 | தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் | 93 |
| 10 | புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் | 101 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண்.16

# நிதித் துறை

# 2021-2022-ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

**“பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று”**

**(குறள் 753)**

பொருள் என்னும் அணையா விளக்கு மட்டும் கையில் இருந்துவிட்டால் நினைத்த இடத்துக்குச் சென்று இருள் என்னும் துன்பத்தை துரத்தி விட முடிகிறது

2. தமிழக அரசின் பொது நிதியை செம்மையான முறையில் நிர்வகிக்கும் பொறுப்பு நிதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**நிதித்துறையின் முக்கிய செயல்பாடுகள்:**

1) இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202-இன்படி சட்டமன்றப் பேரவையின் முன் வைப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

2) மாநிலத்தின் கருவூலக் காப்பாளர் என்ற முறையில் தமிழக அரசின் பொது நிதியை மேலாண்மை செய்தல்.

3) மாநில அரசின் நிதி நிலை மேலாண்மை தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் தேவை ஏற்படும் போது அவற்றை மறுஆய்வு செய்தல்.

4) மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், அரசின் நிதி நிலை இலக்குகளை எய்தும் பொருட்டும், துறைவாரியான நிதித் தேவை, செலவுக்கேற்ற பயன், ஆகியவற்றின் அடிப்படையில் வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம், நிதி நடைமுறைகளுக்குட்பட்டு பல்வேறு கருத்துருக்களைக் கூர்ந்தாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

5) வரவுகளையும், அதற்கேற்றவாறு செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் பொறுப்புடன், கடன் பொறுப்புகளையும் அரசின் வரவுக்கேற்றவாறு பொருத்தமான செலவினங்களை மேற்கொள்வதும்,

பெறப்பட்ட கடன்களை உரிய காலத்தில் திரும்பச்செலுத்துவதை உறுதிசெய்வதும் இத்துறையின் பொறுப்பாகும்.

6) இத்துறையானது, மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் தேவையை நிர்வகிப்பது மற்றும் கடன் மூலம் பெற்ற நிதியை திறம்பட பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்கிறது.

**நிதித்துறை தொலைநோக்குத்திட்டம்**

3. மாநில அரசின் நிதி செயல்பாடுகள் 21-ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப நவீனமயமாக்கப்படுவதை உறுதி செய்வதே நிதித் துறையின் நோக்கமாகும். நிதித்துறையானது பரந்த முன்னுரிமையுடன் வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தின் பேரியல் கூறுகளை துறைகள் சார்ந்த முயற்சிகளுக்கு அவற்றின் வரவு மற்றும் செலவுகளை சார்ந்து நிர்வகிக்கும்.

இத்துறையானது, மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் தேவையை நிர்வகிப்பது மற்றும் கடன் பெற்ற நிதியை திறம்பட பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்கிறது. இந்த சவாலான கட்டமைப்பிற்குள், ஒட்டுமொத்த பொறுப்புணர்வின் அளவு கணிசமாக மேம்பட்டிருப்பதை உறுதிசெய்வதுடன், சரியான நேரத்தில் நிதி ஓட்டத்தின் மீது கட்டுப்பாடுகளும் மற்றும் தணிக்கை செயல்பாடுகள் அதிக வலுவான மற்றும் பயனுள்ள வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதை உறுதிசெய்வதற்கு, நிதித்துறை அந்தந்த துறைகளின் தனிப்பட்ட செலவின முடிவுகளுக்கு அதிக அதிகாரபகிர்வை அந்தந்த துறைகளுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பரந்த நோக்கத்தை, கீழ்காணும் சிறந்த முயற்சிகளின் வாயிலாக அடையலாம்.

- அதிகாரப்பகிர்வு, பொறுப்புணர்வு மற்றும் பணத்திற்கான உயர் மதிப்பை (Value for money) மேம்படுத்தும் வரவு-செலவு திட்ட செயல்முறைக்கு மாறுதல்

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மற்றும் கருவூல அமைப்பினை வலுப்படுத்துதல்.

- தணிக்கை செயல்பாடுகளை வலுப்படுத்துதல்.

- அதிக நம்பகத்தன்மை மற்றும் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன்.

- கொள்முதல் செயல்முறையின் செயல்திறனை மேம்படுத்துதல்.

- அதிகார பகிர்வினை மேம்படுத்துதல்.

**(i) ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மற்றும் கருவூல அமைப்பினை வலுப்படுத்துதல்**

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மற்றும் கருவூல அமைப்பு கீழ்கண்ட வழிகளில் வலுப்படுத்தப்படும்;

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மற்றும் மின்-அலுவலக திட்ட சேவைகளை ஒருங்கிணைத்து, அனைத்து நிதி ஒப்பளிப்புகள் மற்றும் பணியாளர்கள்

தொடர்பான மனிதவள முடிவுகளை இணையவழியில் செயல்படுத்துவதை உறுதி செய்தல்.

- அரசு உதவித் தொகையினை முறையாகப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக நிறுவனங்களின் வங்கி கணக்கு / பரிவர்த்தனை விவரங்களைக் கண்காணிப்பதில் பொது நிதி மேலாண்மை அமைப்பின் செயல்பாடுகளை ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்திலும் உருவாக்குதல்.

- மாநிலத்தின் கருவூலத்தில் இருந்து செலுத்துகைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் குறைபாடுகளை திறம்படக் குறைக்கும் பொருட்டும், முன்-தணிக்கை முறையினை வலுப்படுத்துவதற்காக கருவூல அலுவலகங்களை சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகங்களாக மாற்றுதல்.

- அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் தங்களின் ரொக்க இருப்புகளை வங்கிகளுக்குப் பதிலாக சார் கருவூலங்கள் மற்றும் கருவூலகங்களில் அரசின் பொது கணக்கில் பராமரிப்பதை உறுதி செய்தல்.

- கருவூல அமைப்பினை பணம் வழங்கும் வங்கிகளாக ( Payment Bank) மாற்றுதல்.

### (ii) தணிக்கை முறைகளை வலுப்படுத்துதல்

தணிக்கை முறைகளை வலுப்படுத்துவதற்கு கீழ்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படும்.

- இந்திய தலைமைக் கணக்காயர் தணிக்கை பத்திகளுக்கும் பொதுக் கணக்கு குழு / பொதுத்துறை நிறுவனங்களின் குழுவின் அறிக்கைகளுக்கும், பதிலுரைகளை விரைவுபடுத்துவதற்கான நடைமுறைகளை ஏற்படுத்துதல். பல ஆண்டுகளாக 2000 க்கும் மேற்பட்ட இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் தணிக்கைப் பத்திகள் நிலுவையில் உள்ளன.

- அனைத்து தணிக்கைத் துறைகளிலும் தணிக்கை தகவல் மேலாண்மை முறையினை நடைமுறைப்படுத்துதல்.

- இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் மற்றும் மாநில தணிக்கைத் துறைகள் அளித்த தணிக்கைப் பத்திகளில் நிலுவையில் உள்ள தணிக்கைப் பத்திகளின் தற்போதைய நிலையினை கண்காணித்தல் போன்ற தணிக்கைக்குப் பிந்தைய தொடர் செயல்பாடுகளுக்கென இணை வழிமுறையை உருவாக்குதல்.

- அரசின் அனைத்து தணிக்கைத் துறைகளையும் தணிக்கை இயக்குநர் ஒருவரின் கீழ்

கொண்டுவருதல், இந்த தணிக்கை இயக்குநரை இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணியைச் சார்ந்த அலுவலரை அயற்பணி மூலம் நியமிக்கலாம்.

- தணிக்கைத் துறைகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் அதிக துறைசார் வல்லுநர்களை நியமித்தல்.

### (iii) <u>அதிக பொறுப்புணர்வு மற்றும் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன்</u>

தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கையை குறைக்க, அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி மேம்படுத்தப்படும். இது தணிக்கை ஆய்வறிக்கைகளை குறைத்து மற்றும் அதன் மூலம் அரசின் மீதான எதிர்மறை கருத்துகளையும் குறைக்கும். தவறுகளை விரைவாக கண்டறிவதற்கும், தாமதமின்றி திருத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் வலுவான உள் தணிக்கை முறை ஒன்றை அரசிற்குள் நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். எனவே, அரசின் உள் தணிக்கை அமைப்பு முறையில் அடிப்படை சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும். அரசு துறைகளிலும் முகமைகளிலும் உள் தணிக்கை செயல்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்காக அரசில் செயல்படும் அனைத்துத் தணிக்கைத் துறைகளும் நிதித் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டு ஒருங்கிணைக்கப்படும். தணிக்கைத் துறைகளின் திறன் மேம்படுத்தப்படும். துறைசார் வல்லமை / நிபுணத்துவம் ஊக்குவிக்கப்படும்.

**(iv) கொள்முதல் செயல்முறையின் செயல்திறனை மேம்படுத்துதல்**

மாநிலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பணிகளின் முழு செயல்முறைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கணினிமயமாக்குதல், பணிகளுக்கான மதிப்பீடுகளை தயாரிப்பது முதல், ஒப்பந்தங்கள் கோருதல் மற்றும் வழங்குதல், பணிகளை செயல்படுத்துதல், அப்பணிகளுக்கான இறுதி பட்டியல் செலுத்துவது வரை மின்னணு ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றுவதன் வாயிலாகவும் அரசின் பல்வேறு துறைகளில் திட்ட மேலாண்மை செயல்முறைகளின் செயல்திறனை கணிசமாக மேம்படுத்தவும் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதை பெரிதும் துரிதப்படுத்தவும் இயலும்.

**(v) அதிகாரப் பகிர்வினை மேம்படுத்துதல்**

துரிதமாக முடிவுகளை மேற்கொள்வதற்கும், செயலாக்கத்தை மேம்படுத்துவதற்கும், செலவு மற்றும் நேர விரயத்தினை குறைப்பதற்கும், அதிக பொறுப்புடைமையை உறுதிப்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட துறைத் தலைமைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவு செலவு திட்டத்திற்குள் செலவினங்களை மேற்கொள்வதற்கு நிதித்துறை கூடுதல் அதிகார பகிர்வினை அளிக்கும். இதனை

ஏற்படுத்துவதற்கு, கட்டமைப்புகள் மற்றும் நடைமுறைகளை மறுசீரமைப்பு செய்தல் வேண்டும்.

## நிதித்துறையின் அமைப்பு

4. பின்வரும் துறைகள் / முகமைகள் நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன:-

| | |
|---|---|
| (i) | கருவூலக் கணக்குத் துறை |
| (ii) | அரசு தகவல் தொகுப்பு விவர மையம் |
| (iii) | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை |
| (iv) | கூட்டுறவு தணிக்கைத் துறை |
| (v) | மாநில அரசுத் தணிக்கைத் துறை |
| (vi) | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை |
| (vii) | சிறுசேமிப்புத் துறை |
| (viii) | ஓய்வூதிய இயக்ககம் |
| (ix) | தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் |
| (x) | தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண்.50 ''ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களும்'' குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

## கருவூலக் கணக்குத் துறை

5. கருவூலங்கள் அரசாங்கத்தின் பழமையான செயல்பாட்டு அலகுகளுள் ஒன்றாகும். தொடக்கத்தில் கருவூலங்கள் ஆட்சியர் அலுவலகங்களின் ஒரு பகுதியாக செயல்பட்டு வந்தது. 01.04.1962 முதல் இத்துறை தனித் துறையாக மறுசீரமைக்கப்பட்டு நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இத்துறை கருவூல கணக்கு ஆணையரின் தலைமையின் கீழ் 6 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், 6 சம்பள கணக்கு அலுவலகங்கள், 3 சார் சம்பள கணக்கு அலுவலகங்கள், 37 மாவட்ட கருவூலங்கள், 1 ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், 1 உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்கள் ஆகியவற்றுடன் இயங்கி வருகின்றது. இத்துறை அரசின் பல்வேறு கருவூல செயல்பாடுகளை செய்து வருகின்றது. இத்துறையின் பணியாளர்கள் நிதி மற்றும் கணக்குகள் தொடர்பான பல்வேறு செயல்பாடுகளைக் கையாள பல்வேறு துறைகள், வாரியங்கள், நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**6. கருவூல கணக்குத் துறையின் முதன்மையானப் பணிகளாவன**

1) அரசின் அனைத்து வருவாய் மற்றும் செலவினங்களை கையாளுதல்

2) 9.5 இலட்சத்திற்கும் மேலான அரசு பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குதல்

3) 7.2 இலட்சத்திற்கும் மேலான ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

4) அரசின் திட்டங்கள் மற்றும் பணிகளுக்கான நிதிகளை வழங்குதல்

5) மாதாந்திர கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அனுப்புதல்

6) முத்திரைத்தாள் விற்பனை முகவர்களுக்கு பல்வேறு வகையான நீதி / நீதிசாரா முத்திரைத்தாள்கள் விற்பனை செய்தல்.

7) பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்காக தொடங்கப்பட்ட புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்துதல்.

8) பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் பலவித தல நிதி வைப்புக்கணக்கு மற்றும் தன் வைப்பு கணக்குகளை பராமரித்தல்,

9) அனைத்து துறை தலைவர்களுக்கும் வாகன முன்பணம் மற்றும் கணினி முன்பணம் உள்ளிட்ட முன்பணம் நிதி ஒதுக்கீடு வழங்குதல்.

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்

7. அரசுப் பணிகள் திறம்பட மற்றும் செவ்வனே நடைபெற நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் அரசால் ரூ.288.91 கோடி மதிப்பில் அமல்படுத்தப்பட்டுள்ளது. கருவூலங்கள் வழியாக வழங்கப்படும் நிதியில் பெருவாரியாக அரசு ஊழியர்களின் சம்பளம் சம்பந்தப்பட்ட செலவீனங்களே இருப்பதால், நிதி மேலாண்மையை, மனிதவள மேலாண்மையுடன் ஒருங்கிணைத்தலால், தமிழக அரசின் அனைத்து துறைகளும் இணைந்து ஒத்துழைப்பு நல்குவதுடன் மனிதவள செயல்திறனையும் அதிகரிப்பதற்கும் அரசின் பணிகளை நிகழ் நேரத்தில் கண்காணிப்பதற்கும் கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும் ஏதுவாகும். இதற்கு ஒரு முழுமையான தீர்வை வழங்க திருவாளர் அக்சென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் என்ற முகமை 18.07.2012 அன்று திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக நியமிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளரை தேர்வு செய்தல் ஆகிய பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

- இத்திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஒருங்கிணைப்பாளராக திருவாளர் விப்ரோ நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி முறையில் 29.05.2015 அன்று தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- மேலும் இத்திட்டத்திற்கான கணினி கட்டமைப்பு அனைத்து கருவூல அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டு ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- முதற்கட்டமாக, இத்திட்டம் கரூர் மாவட்டத்தில் ஜனவரி 2020-ல் துவக்கப்பட்டு படிப்படியாக அனைத்து மாவட்டக் கருவூலங்களிலும் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் இதர பட்டியல்கள் அனைத்தும் இத்திட்டத்தின் மூலமாக பெறப்பட்டு ரிசர்வ் வங்கியின் (RBI) இ-குபேர் (e-kuber portal) வழியாக பயனாளர்களின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

- ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் இத்திட்டத்தின் வாயிலாக, அனைத்து மாவட்ட கருவூலகங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவகத்தின் மூலம் பட்டியல் தயார் செய்து, ஓய்வூதியம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

- கருவூலத்தில் பெறப்படும் அரசின் வருவாய் இனங்களை மின் செலுத்துச்சீட்டு (e-Challan) மூலமாக பொதுமக்கள் / அரசு துறைகள்,

வாரியங்கள், நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை மின் வரவுகளாக (e-Receipt) 24 மணிநேரமும் தங்குதடையின்றி இணையத்தின் மூலம் (www.karuvoolam.tn.gov.in) செலுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவைகளுக்காக பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் பரோடா வங்கி ஆகிய நான்கு வங்கிகள் திரட்டல் வங்கிகளாக (Aggregator Banks) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பாரத ஸ்டேட் வங்கி மற்றும் பரோடா வங்கி ஆகிய வங்கிகளின் வாயிலாக தற்போது அரசின் வருவாய்கள் பெறப்பட்டு அரசின் ரிசர்வ் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. மேலும், இவ்வாண்டில் பின்வரும் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்துடன் வணிகவரித்துறை, பதிவுத்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை மற்றும் போக்குவரத்துத் துறை போன்ற நான்கு முக்கிய வருவாய் ஈட்டும் துறைகளை முழுமையாக ஒருங்கிணைத்தல்.

- ஒப்பளிப்பு செய்யும் நபர்களின் மின்னணு தனித்துவ அடையாளப்படுத்துதல் கையொப்ப சான்றிதழ் (DSC) நடைமுறைப்படுத்துதல்.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் மற்றும் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் உடன் ஒருங்கிணைத்தல்.

- இந்தியன் வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகளை திரட்டல் வங்கிகளாக ஒருங்கிணைத்தல்.

- அனைத்துத் துறைகளிலும் மின் பணி பதிவேடுகளை செழுமைப்படுத்துதல் .

- தமிழக அரசின் வாடகை குடியிருப்பு திட்டத்தில், குடியிருப்பு வாடகை வசூலை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்துடன் ஒருங்கிணைத்தல்.

- வருமான பிடித்தத்திற்காக வருமான வரித் துறையுடன் ஒருங்கிணைத்தல்.

- மாநில கணக்காயர் (கணக்குகள் & உரிமைகள்) மூலம் மேற்கொள்ளப்படும் கருவூலம் சாரா பரிவர்த்தனைகளை ஒருங்கிணைத்தல்.

**புதிய கருவூலங்களின் உருவாக்கம் மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டுமானம்**

8. தற்போது, மாநிலத்தில் 37 மாவட்டக் கருவூலங்கள் மற்றும் 243 **சார்நிலைக்** கருவூலங்கள் செயல்படுகின்றன. பழைய மற்றும் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வந்த 82 **சார்நிலைக்** கருவூலங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டு அவற்றுள் 73 **சார்நிலைக்** கருவூலங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள

9 சார்நிலைக் கருவூலங்கள் மற்றும் திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டக் கருவூலங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டும் பணி பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகிறது, அது விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சார்நிலை கருவூலங்கள் இல்லாத 59 வட்டங்கள் கண்டறியப்பட்டு, அவ்வட்டங்களில் சார்நிலைக் கருவூலங்கள் தேவையென அறியப்பட்டது. சார்நிலைக் கருவூலங்கள் இல்லாத வட்டங்களில் சார்நிலைக் கருவூலங்களை உருவாக்கும் பணிகள் ("ஒரு வட்டம் ஒரு சார்நிலை கருவூலம்" என்ற அடிப்படையில்) பல கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தேசிய ஓய்வூதியத் திட்டம்:**

9. தேசிய ஓய்வூதியத்திட்டம் 01.01.2004 அன்று அல்லது அதற்குப் பிறகு நியமிக்கப்பட்ட அகில இந்திய பணி அலுவலர்களுக்காக (AIS) செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய ஓய்வூதியத் திட்டத்தை (NPS) அகில இந்திய பணி அலுவலர்களுக்காக (AIS) செயல்படுத்துவதற்காக, என்.எஸ்.டி.எல் நிறுவனம் மைய ஆவண வைப்பு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டதுடன், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA) அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதி

மேலாளர் மற்றும் வருடாந்திர சேவை வழங்குவோராகவும் நியமிப்பதற்கான ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசு 28.6.2017 அன்று கையெழுத்திட்டது. இதுவரை 237 அகில இந்திய பணி அதிகாரிகளுக்கான சந்தா தொகை மற்றும் அரசாங்க பங்களிப்பு என மொத்தம் ரூ.28,72,57,740/- தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் அறக்கட்டளைக்கு மாற்றப்பட்டுள்ளது. வழக்கமான மாதாந்திர பரிவர்த்தனைகள் தொடர்ந்து செய்யப்படுகின்றன.

**பொது நிதி மேலாண்மை திட்டம்**

10. பொது நிதி மேலாண்மை திட்டத்தின் வாயிலாக, மத்திய அரசின் நிதியுதவி பெறும் நலத்திட்டங்கள் மற்றும் மத்திய-மாநில அரசின் பங்களிப்புடைய நலத்திட்டங்களின் நிதி நிலையினைக் கணக்கிடுதல், பின்தொடர்தல், கண்காணித்தல் மற்றும் கணக்குகளை ஒத்திசைவு செய்து அறிக்கை வெளியிடுதல் முதலானவற்றை மேம்படுத்த இயலும். கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறை இந்த திட்டத்திற்கான ஒருங்கிணைப்பு துறையாகும். இத்துறையானது, இந்திய அரசு மற்றும் தமிழக அரசின் வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில், இத்திட்டத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த முறையின்

**கீழ், 51 அரசுத் துறைகள் தொடர்பான 185-க்கும் மேற்பட்ட மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.**

## அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

11. நிதி தொடர்பான தகவல்களை மிகவும் பயனுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் தொகுப்பு உபகரணங்கள் மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு செலவினைத் திட்டமிடும் நோக்குடன் 1971ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த மின்னணு தகவல் தொகுப்பு வசதிகளைப் பயன்படுத்தி அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாடுகளுக்குத் தேவையான வகையில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிகளுக்காக 1975ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு மையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் (GDC) ஏற்படுத்தப்பட்டது.

கருவூல அளவிலும் மாநில கணக்காயர் அலுவலகத்திலும் கணினி மயமாக்கப்பட்டதை தொடர்ந்து அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் முதன்மைப் பணிகள் மாறுபாடு அடைந்துள்ளது. எனவே அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் கீழ்க்காணும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1) அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்,

2) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்,

3) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி (GPF).

12. அரசாணை (நிலை) எண். 108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 19.04.2010ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி குறித்தப் பணிகள் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. மேற்கண்ட திட்டத்தில் 31.07.2021 அன்றுள்ளபடி 2,12,534 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

13. அரசாணை (நிலை) எண். 53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20.07.2015 இல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டப்

பணியாளர்களிடம் இருந்து ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. மேலும் கருவூலம்/சம்பளக் கணக்கு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட வரவின பட்டியல்களின் அடிப்படையில் 2015-2016 முதல் 2018-2019 வரை உள்ள ஆண்டுகளுக்கான கணக்குத்தாள் தொகுக்கப்பட்டு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 2019-2020-ஆம் ஆண்டிற்கான கணக்குத்தாள் தொகுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

14. மேற்காணும் திட்டத்தில் 8,194 பணியாளர்களுக்கு 31.07.2021 முடிய ரூ.21.86 கோடிக்கு இறுதி தொகை வழங்குவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

**அரசு ஊழியர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்:**

15. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (CPS) 01.04.2003க்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்த அனைத்து அரசு பணியாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் அரசுப் பணியாளர்களிடமிருந்து அவர்களது அடிப்படை ஊதியம், தர ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு அவற்றின் 10 சதவீதத் தொகையும்,

அதே அளவு அரசின் பங்களிப்பு தொகையும், அதன் மீதான வட்டித்தொகையும் கணக்கிடப்பட்டு, அரசு ஊழியர்களின் பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

16. அரசு ஆணை நிலை எண்.201, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.21.05.2009-இன் படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள், நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்ட கணக்குகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசு ஆணை நிலை எண் 463, நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு) துறை, நாள் 27.12.2013-இன் படி, மாநிலக் கணக்காயரால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்குகள் இத்துறைக்கு 01.01.2014 அன்று மாற்றம் செய்யப்பட்டது.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் வழங்கியுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் குறியீட்டு எண்கள் குறித்த விவரம் பின் வருமாறு:

| வ. எண் | பணியாளர் விவரம் | 31.07.2021 அன்று வரை வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள் |
|---|---|---|
| 1 | அரசுப் பணியாளர்கள் | 4,54,197 |
| 2 | நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி பள்ளி பணியாளர்கள் | 1,03,610 |
| 3 | உள்ளாட்சித் துறை பணியாளர்கள் | 30,359 |
| | மொத்தம் | **5,88,166** |

கடந்த 2019-2020 வரை 4,87,823 அரசுப் பணியாளர்கள், நிதி உதவிப் பெறும் கல்வி நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கணக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

**உள்ளாட்சி அமைப்புக்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்:**

17. அரசாணை நிலை எண். 260, நிதி (பிஜிசி) துறை, நாள். 15.10.2015 வாயிலாக மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சிகளில்

பணிபுரியும் உள்ளாட்சி பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரியாக (State Nodal Officer) கருவூலக்கணக்குத் துறை ஆணையர் அவர்களை அரசு நியமித்துள்ளது. இதற்கான மென்பொருள் தேசிய தகவல் மையத்தால் வடிவமைக்கப்பட்டு பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் தங்களது பணியாளர்களின் மாதாந்திர பங்களிப்பு ஓய்வூதிய பிடித்த விவரங்களை இணையதளம் மூலம் பதியப்பட்டு, உள்ளாட்சி தணிக்கைத் துறையால் இணையதளம் மூலமே தணிக்கை மேற்கொள்ளப்படும் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டது. உள்ளாட்சித் துறைகளில் நிலையாக்கப்படாத பதவிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் காலமான பணியாளர்களுக்கு இறுதி இருப்புத் தொகை ஒப்பளிப்பு செய்யும் பணிகளும் ஜனவரி 2019-ம் மாதம் முதல் தொடங்கப்பட்டுள்ளது.

18. உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 30,359 நிலையாக்கப்படாத பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் இணையதளம் வழியாக, சந்தாபிடித்தம் மற்றும் அதற்கீடான உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவை பதிவு செய்யப்பட்டு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் தணிக்கை செய்யப்பட்ட அனைத்து நிலையாக்கப்படாத 22,353 பணியாளர்களுக்கும்

2018-2019-ஆம் ஆண்டு முடிய கணக்குத் தாள் வழங்கப்பட்டுள்ளது.

**பங்களிப்பு ஓய்வூதிய திட்ட இறுதித்தொகை வழங்கும் ஆணை:**

19. பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், பணித்துறப்பு செய்தவர்கள், பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், பணியிலிருக்கும்போது இறந்தவர்கள் ஆகியோர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட இறுதித் தொகை வழங்குவது குறித்து அரசாணை நிலை எண்.59, நிதி (பிஜிசி) துறை, நாள்:22.02.2016-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை அடிப்படையில் 31.07.2021 வரை 23,260 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றுள் 22,893 அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கு அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திலிருந்து பங்களிப்பு ஓய்வூதிய திட்ட இறுதி கணக்குச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பங்களிப்பு ஓய்வூதிய திட்ட இறுதி ஒப்பளிப்பு ஆணை 31.07.2021 வரை (CPS Final Authorization) ரூ.1,240.28 கோடி வழங்கப்பட்டுள்ளது.

20. ஆளுநர் உரையில், அரசின் தணிக்கை மற்றும் மேற்பார்வை செயல்பாடு முழுமையாக ஆய்வு செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 2021-2022-க்கான வரவு செலவு திட்ட உரையில், இந்த அரசு பொறுப்புடைமை மற்றும் ஆக்கத்திறனை அதிகரிக்க பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. தலைமைக் கணக்குத் தணிக்கை அலுவலரின் 2000 தணிக்கைப் பத்திகள் பல ஆண்டுகளாக நிலுவையில் இருப்பது முக்கியமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தவறான செயல்களை முன்கூட்டியே கண்டறிந்து, தாமதமின்றி திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய, அரசிற்குள் வலுவான உள் தணிக்கை நுட்பமுறை அவசியம் என்றும் அரசு குறிப்பிட்டுள்ளது. மாநில அரசு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை தணிக்கை செய்யும் தலைமைச் கணக்குத் தணிக்கை அலுவலக தணிக்கை பிரிவுகளுடன் நிதித்துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது. தலைமைக் கணக்குத் தணிக்கை அலுவலரின் ஆய்வு அறிக்கைகள் மற்றும் வரைவு பத்திகளுக்கான பதில்கள் தொடர்புடைய துறைகளால் நேரடியாக அனுப்பப்படுகின்றன. மேலும், தலைமைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான தணிக்கை குழுவின் மூலம் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து நிலுவையில் உள்ள பத்திகளுக்கு தீர்வு காண்பதற்கு நிதித்துறை தொடர்ந்து

கண்காணித்து வருகிறது. நிலுவையில் உள்ள தணிக்கை பத்திகளுக்கு விரைவாக தீர்வு காண்பதை உறுதி செய்ய இந்த செயல்முறை முறைப்படுத்தப்பட்டு கணினிமயமாக்கப்படும்.

21. தற்போது தணிக்கை தொடர்பான பின்வரும் துறைகள் நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன.

i. கூட்டுறவு தணிக்கைத் துறை

ii. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை

iii. மாநில அரசு தணிக்கைத் துறை

iv. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

**22.** அரசுக்குள் உள்ள தணிக்கை முறையின் அடிப்படை மறுஆய்வை அரசு மேற்கொள்ளும். இந்த நோக்கத்திற்காக, அரசிற்குள் செயல்படும் அனைத்து தணிக்கைத் துறைகளும் அதன் பிரிவுகளும் நிதித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு, அனைத்து அரசுத் துறைகள் மற்றும் முகமைகளின் உள் தணிக்கைப் பணிகள் திறம்பட மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய தடையின்றி ஒருங்கிணைக்கப்படும்.

தணிக்கைத் துறைகளின் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும. மேலும் அவை தொழில்முறைப்படுத்தப்படும்.

23. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் ஆணையர் மற்றும் தலைமைச் செயலக சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த வந்த இந்து சமய மற்றும் அறநிலையத் துறைகளின் தணிக்கைக்காக செயல்படும் தணிக்கைத் துறை இப்போது நேரடியாக நிதித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும்.

24. இந்த முகமைகள், தலைமை கணக்குத் தணிக்கை அலுவலரால் முழுமையாக தணிக்கை செய்யப்படாத நிறுவனங்களின் புறத் தணிக்கை மற்றும் வணிக செயல்பாடுகளைக் கொண்ட அரசு துறைகளில் உள் தணிக்கை செயல்பாட்டை மேற்கொள்கின்றன. தணிக்கை செயல்பாட்டை கணிசமாக வலுப்படுத்த பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும், அவற்றுள்:

i. அரசின் பல்வேறு துறையின் கீழ் தணிக்கை செயல்பாடுகளை மேற்கொள்ளும் அனைத்து தணிக்கைத் துறைகள் மற்றும் பிரிவுகள் நிதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும்.

ii. மாநில தணிக்கை துறை மூலம், சங்கங்கள் சட்டத்தின் கீழ் உள்ள சங்கங்களின் தணிக்கை செயல்பாடுகளும் கணிசமாக வலுப்படுத்தப்பட வேண்டும். பல சங்கங்கள் தங்களுடைய கணக்குகளை பல ஆண்டுகளாக இறுதி செய்யாமல் உள்ளன. இச்சங்கங்களை ஒழுங்குபடுத்தப்படவேண்டிய பதிவுத் துறை தலைவரால் இச்செயல்பாடுகளை முழுமையாக கண்காணிக்க இயலவில்லை.

iii. நிதி சார்ந்த விஷயங்களை ஒழுங்குபடுத்தி மேம்படுத்துவதை உறுதிபடுத்த சங்கங்களாக உருவாக்கப்பட்ட அரசு முகமைகளில் சாத்தியமானவற்றை நிறுவனங்களின் சட்டத்தின் கீழ் லாப நோக்கமற்ற நிறுவனங்களாக மாற்றி நிபுணத்துவம் வாய்ந்த நபர்கள் மூலம் சட்ட முறை தணிக்கைக்கு உட்படுத்தப்படும்.

## 25. தணிக்கை செயல்பாட்டை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

i. நிபுணத்துவம் வாய்ந்த நபர்களை நேரடி நியமனம் மூலம் உரிய நிலையில் பணியமர்த்த வழிவகை வழங்குதல்.

ii. பயிற்சி மற்றும் தணிக்கை கையேடுகளை திருத்துதல் மற்றும் புதுப்பித்தல், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் மூலம் தணிக்கைப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல்.

iii. சுய நல நோக்கங்கள் உருவாகமால் இருப்பதை உறுதி செய்ய வலுவான பணியிடமாற்றக் கொள்கையை செயல்படுத்துதல்.

iv. கூட்டு நடைமுறைகளுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கையான நிறுவன அதிகார வரம்பின் அடிப்படையில் நிலையான பகுதியில் தணிக்கைப் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு பதிலாக தொடர்பின்றி தணிக்கைப் பணியாளர்களை பணியமர்த்துதல்.

v. தணிக்கை செயல்முறைகளை கண்காணிக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்.

vi. தணிக்கை கண்டுபிடிப்புகள் மற்றும் அறிக்கைகளின் மீது தொடர்புடைய துறைத் தலைமை மற்றும் நிறுவனங்களுடன் முறையான மற்றும் தீவிர கண்காணிப்பில் இருத்தல்.

26. மாநில அரசின் தற்போதைய அனைத்து தணிக்கை துறைகளையும் மேற்பார்வையிட மாநில தணிக்கை இயக்குநர் என்ற பதவி நிலை உருவாக்கப்படும். இந்திய தணிக்கை மற்றும் கணக்கு பணி சேவையைச் சார்ந்த அலுவலரை மாற்றுப் பணியில் மாநில தணிக்கை இயக்குநராக நியமிப்பது உசிதமானது.

27. மாநில அரசுக்குள் உள்ள ஒட்டுமொத்த தணிக்கை செயல்முறையை மேம்படுத்துவதற்கான

பரிந்துரைகளை வழங்க ஓய்வு பெற்ற துணை தலைமை கணக்காயர் நிலை அதிகாரிகள் மற்றும் தணிக்கை நிபுணர்கள் அடங்கிய உயர் அதிகார குழு ஒன்று அமைக்கப்படும்.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

28. மாநில அரசின் கணக்குகளின் தணிக்கைப்பணி முழுவதும் இந்திய தலைமை கணக்கு தணிக்கையரை சார்ந்தது போன்று மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின் கீழ் தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும்.

29. இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 (த. நா. சட்ட எண்:24) நிறைவேற்றப்பட்டு 15.12.2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 24.08.2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இது அந்நிறுவனங்களின் தணிக்கைக்கு புதிய சட்டப்பூர்வ ஆதாரத்தை வழங்குகிறது.

30. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் சட்டம் 2014 பிரிவு 20-இன் கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் தன்னால் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் மீதான தொகுப்பு

அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு சமர்ப்பித்து அரசால் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

31. தமிழ்நாடு சட்டமன்றத்தில் தணிக்கை அறிக்கையினை தயாரித்து சமர்ப்பிப்பது குறித்து மாநில கணக்காயரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கை வடிவத்தை அவ்வப்போது மாற்றி அமைக்கவும் தமிழ் நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை விதிகள் 2016 வகை செய்கிறது.

32. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014-இன் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கையைத் தவிர பிரிவு 5-ன்படி அரசின் முன் அனுமதியுடன் இதர நிறுவனங்களின் தணிக்கையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் சட்டப்பூர்வமாக மேற்கொள்ளப்படுகிறது. தற்போது பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 15 |
| 2 | நகராட்சிகள் | 121 |
| 3 | பேரூராட்சிகள் | 528 |
| 4 | மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 388 |
| 6 | பல்கலைக் கழகங்கள் | 23 |
| 7 | நூலக ஆணைக்குழுக்கள் | 32 |
| 8 | வேளாண்மை விற்பனைக் குழுக்கள் | 23 |
| 9 | தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் | 1 |
| 10 | வேளாண் விற்பனைக் குழு பொறியியல் பிரிவு | 3 |
| 11 | கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி | 1 |
| 12 | உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள் | 28 |
| 13 | கிராம ஊராட்சிகள் (ஆண்டுதோறும் சுழற்சி 22% முறையில்) மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை - 12524 | 2801 |
| 14 | பல்வகை நிறுவனங்கள் | 12 |
| 15 | தேசிய சமூக நலத் திட்டம் | 32 |
| | **மொத்தம்** | **4039** |

**உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்**

33. இத்துறையால் உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் தணிக்கையானது பின் தணிக்கை பணிகளை உறுதி செய்யக்கூடிய பொதுவான தேவைகளை பூர்த்தி செய்கின்றது. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டும் விதிகளின்படியும், அரசாணைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அவ்வமைப்புகளின் செயல்பாட்டின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கின்றனவா என்பதை சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் அவை உத்தேசிக்கப்பட்ட பயனாளிகளின்

நலனுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது.

**மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை (Immediate Post Audit) முறையை அமல்படுத்தப்படுதல்**

34. உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற கீழ்க்கண்ட 14 மாநகராட்சிகளிலும் 15 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை செயல்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுக்கள் தணிக்கைக்கு உடனடியாக வழங்கப்பட்டு, அச்செலவுச் சீட்டுகளின் தணிக்கை உடனுக்குடன் செய்யப்பட்டு, குறைபாடுகள் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் நிர்வாகத்தால் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

**உடன் நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படும் மாநாகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்**

| வ. எண் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் |
|---|---|---|
| 1. | சென்னை | காஞ்சிபுரம் |
| 2. | சேலம் | கடலூர் |
| 3. | கோயம்புத்தூர் | கரூர் |
| 4. | திருச்சி | கும்பக்கோணம் |
| 5. | மதுரை | புதுக்கோட்டை |
| 6. | திருநெல்வேலி | பழனி |
| 7. | தூத்துக்குடி | பொள்ளாச்சி |
| 8. | வேலூர் | ஊட்டி |
| 9. | திருப்பூர் | மறைமலைநகர் |
| 10. | ஈரோடு | தாம்பரம் |
| 11. | தஞ்சாவூர் | பல்லாவரம் |
| 12. | திண்டுக்கல் | திருவண்ணாமலை |
| 13 | ஆவடி | கொடைக்கானல் |
| 14 | நாகர்கோவில் | இராஜபாளையம் |
| 15 | | கோவில்பட்டி |

35. உடன் நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு தணிக்கை மறுப்புரைகள் ஏற்கப்படும் அல்லது நீக்கப்படும். நிலுவையில் உள்ள மறுப்புரைகளையும் வரவு மற்றும் செலவுகள் தொடர்பான பத்திகளும் இறுதி செய்யப்பட்டு அவற்றை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிகழ்வு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்**

36. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நிகழ்வு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) 1999–2000, 2000-2001 ஆகிய கணக்காண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. 2016-2017 முதல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 7 இலக்க

குறியீடுகளை கொண்ட தேசிய அளவிலான நகராட்சிகளின் கணக்கு நடைமுறை சார்ந்த கணக்கீடு முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டுக் கணக்குகளுக்கு தணிக்கை சான்று வழங்குதல்:**

37. அரசாணை பல்வகை எண்.93, நிதி (நிதிக்குழு-IV)த் துறை, நாள் 28.03.2003-இன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிகழ்வு அடிப்படையிலான கணக்குகள் (Accrual Based Accounting) செயல்படுத்தப்படுவதை தொடர்ந்து ஆண்டுக் கணக்குகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலர்களால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

**அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைத் திறன்**

38. இத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட 1327 பணியிடங்களில் இரு பணியிடங்கள் வேற்றுப்பணி அடிப்படையில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமும் மீதமுள்ள பணியிடங்கள் இத்துறையிலேயே நேரடி நியமனம் மற்றும் பணிமாறுதல் பணிநியமனம் மூலமும் நிரப்பப்படுகின்றது.

| பணியிடத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இயக்குநர் | 1 |
| இணை இயக்குநர் | 9 |
| துணை இயக்குநர் | 17 |
| உதவி இயக்குநர் | 72 |
| ஆய்வாளர் | 318 |
| துணை ஆய்வாளர் | 293 |
| உதவி ஆய்வாளர் | 293 |
| அமைச்சுப்பணி | 147 |
| பொது சார்நிலைப்பணி | 47 |
| உள்ளாட்சி நிதித் தணிக்கை சார்நிலைப் பணி – தற்காலிக விதி (ஓட்டுநர்) | 09 |
| அடிப்படை பணி | 119 |
| வேற்றுப்பணி (முறைமை பகுப்பாய்வாளர் மற்றும் உதவி முறைமை பகுப்பாய்வாளர்) | 02 |
| மொத்தம் | 1327 |

**தணிக்கை அமைப்பு**


39. தற்போது 14 மாநகராட்சிகளிலும், 15 நகராட்சிகளிலும் மற்றும் 13 பல்கலைக்கழகங்களிலும் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2000-2001-ஆம் ஆண்டு முதல், 388 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் காலாண்டுத் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் அல்லது ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 22 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்தம் உள்ள 12,524 ஊராட்சிகளில் ஆண்டு தோறும் 2,801 கிராம ஊராட்சிகளில் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 106 நகராட்சிகள், 10 பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும்

மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




பல்கலைக் கழக மானியக்குழு, மாநில / மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் பயன்படுத்தபட்டதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**தணிக்கை நிலை முன்னேற்றம்**

40. 2019-2020 ஆம் ஆண்டிற்கான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், 120 நகராட்சிகள், 527 பேரூராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் தணிக்கை முடிவுற்றுள்ளது. 2019-20 ஆம் ஆண்டிற்கான கிராம ஊராட்சிகளின் 22% சோதனைத் தணிக்கை, முடிவுற்றது. மேலும் அனைத்து நிறுவனங்களின் 2020-21 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 31.12.2021-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது

| வ. எண் | தணிக்கை ஆண்டு | மொத்தமுள்ள நிறுவனங்கள் | தணிக்கை முடிக்கப்பட்டவை | தணிக்கை நிலுவை |
|---|---|---|---|---|
| 1) | 2015-2016 | 3996 | 3996 | 0 |
| 2) | 2016-2017 | 4042 | 4042 | 0 |
| 3) | 2017-2018 | 4039 | 4038 | 1 |
| 4) | 2018-2019 | 4027 | 4026 | 1 |
| 5) | 2019-2020 | 4027 | 4025 | 2 |
| 6) | 2020-2021 | 4029 | 702 | 3315 |

**தொகுப்பு தணிக்கை அறிக்கை சமர்ப்பித்தல்**

41. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 பிரிவு 20 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 2016, விதி 19-இன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் ஆண்டுதோறும் தொகுப்பு

தணிக்கை அறிக்கை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கு அரசிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | ஆண்டு | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1) | 2015-2016 | 09.07.2018 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 2) | 2016-2017 | 05.02.2021 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது |
| 3) | 2017-2018 | தொகுப்புத் தணிக்கை அறிக்கை அச்சிடப்பட்டு சட்டப்பேரவையில் சமர்ப்பிக்க தயார் நிலையில் உள்ளது. |
| 4) | 2018-2019 | தொகுப்புத் தணிக்கை அறிக்கை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அச்சிடும் பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 5) | 2019-2020 | வரைவு தொகுப்புத் தணிக்கை அறிக்கை தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. |

**தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை**

42. தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது

கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர கால முறை அறிக்கை மூலம் அரசுக்கும், சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளின் தலைவர்களுக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தெரியப்படுத்தப்படுகின்றன.

43. தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு திருப்தியான விளக்கங்கள் அளிக்கும் நிலையில் தணிக்கைத் தடைகள் நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிர்வாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கைத் தடைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.

44. தற்போதைய சிறந்த நடைமுறைகளின்படி, தணிக்கையின் தொடக்க நிலை மற்றும் இறுதி நிலைகளில் கலந்தாய்வு செய்யப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

**மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்**

45. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி ஆணையரை தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்கள் அரசு ஆணை எண். 1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ2), நாள் 04.01.2007-ல் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளன.

அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட உயர் நிலைக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர்நிலைக் குழு நகராட்சி நிர்வாக இயக்குநரை தலைவராகக் கொண்டும் அரசு ஆணை நிலை எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 22.5.2007-இன்படி அமைக்கப்பட்டுள்ளது.

## தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

46. பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் 01.04.2020 முதல் 31.07.2021 முடியவுள்ள காலத்தில் 28933 தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்த வகையில் 755.61 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

### தணிக்கைத் தடைகளின் மீதான ரொக்கம் வசூல் செய்த விவரம் ஏப்ரல் – 2020 முதல் ஜுலை – 2021

| வ. எண் | மாதம் | பத்திகளின் எண்ணிக்கை | தொகை வசூலிக்கப்பட்டது (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1) | ஏப்ரல் -2020 | 745 | 24.48 |
| 2) | மே – 2020 | 527 | 4.98 |
| 3) | ஜுன்- 2020 | 524 | 2.81 |
| 4) | ஜுலை –2020 | 885 | 46.02 |
| 5) | ஆகஸ்ட் – 2020 | 1863 | 11.00 |
| 6) | செப்டம்பர் – 2020 | 2260 | 34.98 |
| 7) | அக்டோபர் – 2020 | 3370 | 57.13 |
| 8) | நவம்பர் – 2020 | 2814 | 17.77 |
| 9) | டிசம்பர் – 2020 | 7506 | 216.64 |
| 10) | ஜனவரி – 2021 | 1699 | 47.25 |
| 11) | பிப்ரவரி – 2021 | 2610 | 152.42 |
| 12) | மார்ச் – 2021 | 517 | 19.53 |
| 13) | ஏப்ரல் -2021 | 558 | 5.7 |
| 14) | மே – 2021 | 73 | 22.93 |
| 15) | ஜுன்- 2021 | 310 | 6.22 |
| 16) | ஜுலை –2021 | 2672 | 85.75 |
| | மொத்தம் | 28933 | 755.61 |

**தணிக்கைக் கட்டணம்**

47. பல்கலைக் கழகத் தணிக்கைக்கு 100% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனை குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் 2 சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. கேட்பு தொகையான 2886 இலட்சம் ரூபாயில், மேற்படி நிறுவனங்களால் தணிக்கைக் கட்டணமாக 1386.04 இலட்சம் ரூபாய் 2020-2021-ஆம் நிதியாண்டில் செலுத்தப்பட்டுள்ளது.

**சிறப்புப் பணிகள்**

48. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**அ) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்:**

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

31.07.2021 அன்றைய நிலவரப்படி **30,336 ஓய்வூதியதாரர்கள்,** நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய பகிர்வு நிதி தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் முன்மொழிவுகள் தொடர்பான குறைகளை களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடன் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

### இ) நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.5.1999 இன் படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 01.08.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 01.04.2020

முதல் 31.07.2021 முடிய ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தின் கீழ் 238 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 88.06 இலட்சம் ரூபாயும், 01.04.2020 முதல் 31.07.2021 முடிய ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 108 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 48.15 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**ஈ) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்**

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7)த் துறை, நாள் 15.03.2013-இன்படி, ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 01.04.2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் 01.04.2020 முதல் 31.07.2021 முடிய ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தில் 97 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 44.35 இலட்சம் ரூபாயும் 01.04.2020 முதல் 31.07.2021 முடிய குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 221 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 98.91 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**உ) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகளும் அரசால் 1967-ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 01.04.2020 முதல் 31.07.2021 முடிய ரூ.20.10 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக அளிக்கப்பட்டுள்ளது.

**ஊ) அறக்கட்டளைகளின் பொருளாளர்**

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 01.04.1952 முதல் இத்துறையால் பராமரிக்கப்படும் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது.

தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 19.75 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அறக்கட்டளைகளும், 36.92 கோடி ரூபாய் மதிப்புள்ள 891 மாநில அறக்கட்டளைகளும் உள்ளன. 01.04.2020

முதல் 31.07.2021 முடிய 302 அறக்கட்டளை நிறுவனங்களுக்கு 41.93 இலட்சம் ரூபாயும் உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்கப்படுவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை**

49. அரசாணை (நிலை) எண். 260, நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு) துறை நாள் 15.10.2015-ன் படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத் (Contributory Pension Scheme) தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் பணியாளர்களின் சந்தா மற்றும் நிர்வாக பங்களிப்பின் சரித்தன்மை உறுதி செய்யப்படுகிறது. 01.04.2020 முதல் 31.07.2021 முடிய உள்ள காலத்தில் 2019-2020-ஆம் ஆண்டிற்கு 354 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 2020-2021-ஆம் ஆண்டிற்கு 49 ஊராட்சி ஒன்றியங்களின் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்குகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இதர உள்ளாட்சி அமைப்புகளான 14 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 464 பேரூராட்சி நிறுவனங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகளையும் அதன் சரித்தன்மையினையும்

தணிக்கைத் துறையினரால் சரிபார்க்கப்பட்டு தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

50. i) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென பிரத்தியேக பயிற்சிப் பிரிவு துணை இயக்குநரின் தலைமையில் செயல்படும் வகையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள நேரடி நியமன உதவி ஆய்வர்கள் மற்றும் பணி மாறுதல் பணி நியமனம் மூலம் பதவி உயர்வு பெற்ற உதவி ஆய்வர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்கப்படுகிறது. தணிக்கை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அனைத்து தணிக்கையாளர்களுக்கும் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமையினை (AIMS) செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மூன்று இலக்குகள் (Mile Stone) மென்பொருள் வடிவமைப்பு மற்றும் முன்னேற்றம், பயனர் ஏற்றுக்கொள்ளும் சோதனை, விடுபதிகை) முடிவுற்று, தொடர் பயிற்சிகள் தணிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

## கூட்டுறவு தணிக்கைத் துறை

51. சந்தானம் குழு மற்றும் நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவு தணிக்கை துறையானது 17.06.1981 முதல் தனி துறையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983-இன் 80-வது பிரிவின்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, 14 நிர்வாக பதிவாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் சட்டபூர்வ தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

52. கீழ்க்காணும் நிர்வாகப் பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்டவையாகும்.

| வ. எண். | நிர்வாகப் பதிவாளர்களின் விவரம் | கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 8453 |
| 2. | கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் | 1356 |
| 3. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 302 |
| 4. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 210 |

| வ. எண். | நிர்வாகப் பதிவாளர்களின் விவரம் | கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 5. | தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் | 701 |
| 6. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 720 |
| 7. | மீன் வளத் துறை இயக்குநர் | 1381 |
| 8. | கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப்பணிகள் ஆணையர் | 109 |
| 9. | சர்க்கரைத் துறை ஆணையர் | 17 |
| 10. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 1 |
| 11. | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர். | 114 |
| 12. | பட்டு வளர்ச்சித் துறை, இயக்குநர் | 24 |
| 13. | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம் துறை இயக்குநர் | 125 |
| 14. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர் | 49 |
| | மொத்தம் | 13562 |

## கூட்டுறவு தணிக்கை துறையின் செயல்பாட்டின் நோக்கம்:

53. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்து, அச்சங்கங்களின் நிதிநிலை அறிக்கைகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும்

தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. மேலும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் 1988, சங்கங்களின் துணை விதிகள் மற்றும் அரசு வழிகாட்டுதல்களின்படி செயல்படுவதை உறுதி செய்து, அரசின் நிதியுதவி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உள்ளதை உறுதி செய்கிறது.

**பணியாளர் எண்ணிக்கை**

**54. 2842 பணியிடங்கள் கூட்டுறவு தணிக்கைத் துறையில் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :**

| வ. எண். | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | கூடுதல் இயக்குநர் | 3 |
| 3 | இணை இயக்குநர் | 7 |
| 4 | துணை இயக்குநர் | 16 |
| 5 | உதவி இயக்குநர் | 75 |

| வ. எண். | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 6 | உதவி கணினி பொறியாளர் | 1 |
| 7 | கூட்டுறவு தணிக்கை அலுவலர் | 679 |
| 8 | முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர் | 746 |
| 9 | இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் | 1110 |
| 10 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 5 |
| 11 | இளநிலை உதவியாளர் | 58 |
| 12 | தட்டச்சர் | 37 |
| 13 | ஓட்டுநர் | 10 |
| 14 | பதிவறை எழுத்தர் | 36 |
| 15 | அலுவலக உதவியாளர் | 41 |
| 16 | இரவு காவலர் | 17 |
| | மொத்தம் | 2842 |

**நகர வங்கிகள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்:**

55. அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ தணிக்கை, பட்டயக் கணக்காளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**சட்டப் பூர்வ தணிக்கை மற்றும் தணிக்கைக் கட்டணம்**

56. பிரதம கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பூர்வ தணிக்கை, 45 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கு தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

57. அடிப்படைவிதி 127-ன் படி அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில், அதாவது தணிக்கைக்கு 45 மனித நாட்களுக்கு மேல் தேவைப்படும் நேர்வில் முழுநேர தணிக்கையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசாணை நிலை எண்.27, நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை, நாள்: 12.02.2020- இன் படி இத்தணிக்கைக்கு கட்டணமாக

35 சதவீத சம்பளத் தொகை சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

## 58. தணிக்கை கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணம் வசூல் விவரம்

| வருடம் | தணிக்கை கட்டணம் (ரூபாய் கோடியில்) | அ.வி. கட்டணம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2016-2017 | 3.13 | 10.24 |
| 2017-2018 | 2.89 | 11.49 |
| 2018-2019 | 2.58 | 12.91 |
| 2019-2020 | 2.87 | 13.82 |
| 2020-2021 | 4.79 | 15.56 |

## 59. தணிக்கை முன்னேற்ற நிலை

கடந்த ஐந்தாண்டுகளில் தணிக்கை முன்னேற்ற விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | தணிக்கை வருடம் | மொத்த சங்கங்கள் | தணிக்கை முடிக்கப்பெற்றவை மற்றும் அறிக்கைகள் வழங்கப்பட்டவை | நிலுவை சங்கங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2015-2016 | 14017 | 13583 | 434 |
| 2 | 2016-2017 | 14007 | 13551 | 456 |
| 3 | 2017-2018 | 13768 | 13335 | 433 |
| 4 | 2018-2019 | 13622 | 13085 | 537 |
| 5 | 2019-2020 | 13565 | 12449 | 1116 |

2020-2021 -ஆம் ஆண்டிற்கான மொத்தம் உள்ள 13,562 சங்கங்களில் 1480 கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை 31.03.2022-க்குள் முடிக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 இன் பிரிவு 81-ன் கீழ் விசாரணையில் உள்ளவை, வணிக குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையில் உள்ளவை, நீதிமன்ற வழக்கு காரணமாக புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவை, மற்றும் கணக்கு எழுதப்படாமல் உள்ளவை போன்ற காரணங்களினால் 2019-2020-ஆம் ஆண்டுவரை சில சங்கங்களின் தணிக்கை நிலுவையாக உள்ளது. இச்சங்கங்களின் தணிக்கையை முடிக்க சம்பந்தப்பட்ட நிர்வாகத்துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 60. **தனி அறிக்கைகள் (Special Reports)**

தணிக்கையில் கையாடல், மோசடி, கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதி மீறல், இருப்பு குறைவு ஆகிய கடுங்குறைகள் கண்டறியும் போது அனைத்து விவரங்களும் தனி அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பதிவாளருக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள உடன் தெரிவிக்கப்படுகிறது. அரசாணை எண்.267, நிதி(கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள்.06.08.2018-ன் படி தனி அறிக்கைகள் மீது நிர்வாக

பதிவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் 2017-2018–ஆம் ஆண்டுக்கு அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டிலிருந்து நிர்வாக பதிவாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கை குறித்த விவரம் எதிர் நோக்கப்பட்டுள்ளது.

ஐந்த ஆண்டுகளுக்கான தனி அறிக்கைகள் விவரம் பின் வருமாறு:

| வருடம் | தனி அறிக்கைகள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2016- 2017 | 357 | 42.90 |
| 2017-2018 | 569 | 59.57 |
| 2018-2019 | 609 | 65.08 |
| 2019-2020 | 544 | 47.95 |
| 2020-2021 | 506 | 94.63 |

**துறையின் புதிய முயற்சிகள்**

61. இத்துறையின் பணியிடங்கள், அரசாணையின்படி மறுசீரமைப்பு செய்யப்பட்டபின், துவக்க நிலை பணியிடமான இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களில் காலியாக உள்ள 1000 பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடிப் பணி நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

**தணிக்கையாளர்களின் திறன் மேம்பாட்டு பயிற்சி**

62. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான குறுகியகால பயிற்சிகளும், வருடந்தோறும் இரண்டு நாட்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

**தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை திட்டம்(AIMS)**

63. தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை என்பது இணையம் மூலம் இயங்கக் கூடிய மென்பொருளாகும். இதன் மூலமாக தணிக்கை தொடர்பான தகவல்களான தணிக்கைத் திட்டம் ஒப்புதல் வழங்குதல், தணிக்கையாளர்களின் நாட்குறிப்புகள் சமர்ப்பித்தல், தணிக்கை முன்னேற்றம், தணிக்கை சான்று வழங்குதல், நிதிநிலை அறிக்கைகளை பதிவேற்றம் செய்தல், தணிக்கைக் கட்டணம், வசூல் விவரங்கள், தணிக்கையில் கண்டறியப்படும் கடுங்குறைகள் தொடர்பான தனி அறிக்கை விவரங்கள் ஆகியவற்றை உடனுக்குடன் தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை திட்ட மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

## மாநில அரசு தணிக்கைத் துறை

64. அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை 1969-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை எண். 598, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 03.08.1992-ன் படி நடைமுறையில் இருந்த உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் அரசு வணிகத் திட்டங்கள் துறைகளின் பணிகள் திருத்தி அமைக்கப்பட்டு அரசுத் துறைகளிலும் உட்தணிக்கை மேற்கொள்ளும் வகையில் முதன்மை உட்தணிக்கையாளர் சட்டப்பூர்வ வாரியங்களின் முதன்மை தணிக்கையாளராக செயல்பட்டு வந்தது. இத்துறையின் பணி மற்றும் கடமைகள் திருத்தியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து தனிச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறைகளின் உட்தணிக்கை மற்றும் அரசின் நிதியதவி பெறும் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் தணிக்கை, வாரியங்களின் திட்ட தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருவதை கருத்திற் கொண்டு உட்தணிக்கை மற்றும் சட்டப்பூர்வ வாரியங்களின் தணிக்கைத் துறையின் பெயர் 'மாநில அரசுத் தணிக்கைத் துறை' என அரசாணை எண்.264 நிதி(உள்ளாட்சி நிதி)த் துறை, நாள்.16.08.2019-ன் வழி மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

## 65. தணிக்கையின் செயற்பரப்பு

- தணிக்கை நிறுவனங்களின் அனைத்து வரவு மற்றும் செலவினங்களை முறையான ஆய்வு மற்றும் தணிக்கை மேற்கொள்ளுதல்.

- தணிக்கை நிறுவனங்களில் அனைத்து நிதி பரிவர்த்தனைகள் மற்றும் நிலையான ஒழுங்குமுறைகள் மற்றும் உரிய விதிமுறைகள் சரியாக பின்பற்றுப்படுவது தொடர்பான கண்காணிப்புகளை உறுதிபடுத்துதல்.

- வாரியங்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்கள் (ம) பொது வருங்கால வைப்பு நிதி / சிறப்பு சேமநல நிதித் திட்டம் இறுதி இருப்புத் தொகைகள் ஆகியவற்றினை உறுதி செய்து தணிக்கைச் சான்று வழங்குதல்.

- வாரியங்கள் / நிறுவனங்களின் தணிக்கை தடைகளில் உள்ள கடுங்குறைபாடுகள் (Serious irregularities) குறித்த அறிக்கையினை தொடர்ந்து கண்காணிக்க பொது நிறுவனங்கள் குழுவில் இறுதி தீர்மானம் நிறைவேற்றுதல்.

**66. அனுமதிக்கப்பட்ட பணியிட விபரம்**

| வ. எண் | பதவி | அனுமதிக்கப்பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1. | இயக்குநர் | 01 |
| 2. | இணை இயக்குநர் | 01 |
| 3. | துணை இயக்குநர் | 06 |
| 4. | உதவி இயக்குநர் | 47 |
| 5. | ஆய்வாளர் | 90 |
| 6. | துணை ஆய்வாளர் | 75 |
| 7. | கணினி பகுப்பாய்நர் | 01 |
| 8. | உதவி ஆய்வாளர் | 557 |
| 9. | இளநிலை உதவியாளர் | 33 |
| 10. | தட்டச்சர் | 36 |
| 11. | சுருக்கெழுத்து தட்டச்சர் தரம் I | 01 |
| 12. | சுருக்கெழுத்து தட்டச்சர் தரம் III | 01 |
| 13. | பதிவுறு எழுத்தர் | 05 |
| 14. | ஓட்டுநர் | 02 |
| 15. | தொலைபேசி இயக்குபவர் | 01 |
| 16. | அலுவலக உதவியாளர் | 43 |
| 17. | காவலர் | 03 |
| 18. | தூய்மைப் பணியாளர் | 01 |
| மொத்தம் | | 904 |

**தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்கள்**

67. மாநில அரசு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட நிறுவனங்களின் விபரம்

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | சட்டப்பூர்வ நிறுவனங்கள் | 06 |
| 2. | நீதித்துறை கட்டுப்பாட்டிற்குட்பட்டவை (நிர்வாக போராட்சியர் (AG), பொறுப்பு சொத்தாட்சியர் (OL), நொடித்தோர் சொத்தாட்சியர் (OL) போன்றவை) | 06 |
| 3. | வேளாண்மைத் துறை (அனைத்து மாவட்டங்களில் உள்ள முதன்மை கிடங்குகள் மற்றும் துணை கிடங்குகள், விதைப் பண்ணைகள் போன்றவை) | 1092 |
| 4. | அரசு நிறுவனங்கள் (தமிழ்நாடு திரைப்பட பிரிவு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தணிக்கை போன்றவை) | 1138 |
| 5. | அரசு உதவி பெறும் நிறுவனங்கள் (உலக தமிழாராய்ச்சி நிறுவனம், பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் போன்றவை) | 753 |

| | | |
|---|---|---|
| 6. | ஆதி திராவிட பழங்குடியினர் கல்வி உதவித் தொகை தணிக்கை | 2572 |
| 7. | எடையளவு நிறுவனங்கள் (அனைத்து மாவட்டங்களிலுள்ள முத்திரை ஆய்வாளர் மற்றும் முத்திரை உதவி ஆய்வாளர் அலுவலகங்கள்) | 338 |
| 8. | அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள்/பொறியியல் கல்லூரிகள் | 37 |
| 9. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத் தணிக்கை (பள்ளி செல்லும்/ பள்ளி செல்லா மையங்கள்) | 97397 |
| **மொத்தம்** | | **103339** |

மேற்காணும் தணிக்கை நிறுவனங்களில் உள்ள கீழ்க்கண்ட முக்கியமான நிறுவனங்களுக்கும் இத்துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
2. தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம்
3. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
4. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
5. கதர் கிராம தொழில் வாரியம்

6. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு (சமூக பாதுகாப்பு) திட்டம்

7. நாட்டுப்புற கலைஞர் நல வாரியம்

8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

9. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்

10. 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள்

11. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித்தொகை திட்டம்

12. அண்ணா மேலாண்மை நிறுவனம்

13. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள்

14. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

15. ஆசிரியர் தேர்வு வாரியம்

16. இதர நிறுவனங்கள்

17. நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப் பணித் திட்டம்

18. தமிழ்நாடு அரசு மருத்துவ உதவித் திட்டம்

19. குடும்ப பாதுகாப்பு நல நிதி

20. மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

21. அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள் (ம) பொறியியல் கல்லூரிகள்

22. அனைத்து அரசு துறைகளின் ஊதிய நிர்ணயத் தணிக்கை

    (வணிக வரித் துறை/பதிவுத் துறை (ம) போக்குவரத்து துறையின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது)

23. பாராளுமன்ற/சட்டமன்ற தேர்தல் செலவின தொகை

மேற்கண்ட சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் தமிழ்நாடு சட்டசபையின் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

## 68. தணிக்கை நிலை விபரம் (30.06.2021 அன்றைய நிலையில்)

| வ. எண். | தணிக்கை நிறுவனங்களின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு | தணிக்கை நடப்பில் உள்ள ஆண்டு | பத்திகளின் எண்ணிக் கை | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2017-2018 | 2018-2019 | 500 | 1230185.51 |
| 2. | தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் | 2018-2019 | 2019-2020 | 641 | 57580.61 |
| 3. | சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் | 2018-2019 | 2019-2020 | 539 | 87116.90 |
| 4. | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 2017-2018 | 2019-2020 | 1020 | 35236.39 |
| 5. | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 2017-2018 | 2018-2019 (ஆண்டு கணக்கு இதுவரை பெறப்பட வில்லை) | 1736 | 26144.80 |
| 6. | தமிழ்நாடு வக்ஃபு வாரியம் | 2014-2015 | 2015-2016 - 2019-2020 முடிய | 1435 | 3823.72 |
| 7. | நிர்வாக பேராட்சியர் | 2017-2018 | 2018-2019 | 938 | 424.76 |
| 8. | பொறுப்பு சொத்தாட்சியர் | 2018-2019 | 2019-2020 | 1729 | 6243.85 |
| 9. | நொடித்தோர் சொத்தாட்சியர் | 2017-2018 | 2018-2019 | 1297 | 3215.08 |
| 10. | சட்டப்பூர்வ கலைப்பாளர் | 2014-2015 | 2015-2016 (முதல் அரையாண்டு) - 2019-2020 முடிய | 2153 | 133127.34 |
| 11. | எடையளவு நிறுவனங்கள் | 2018-2019 | 2019-2020 | 13702 | 29917.80 |
| 12. | அரசு நிறுவனங்கள் | 2018-2019 | 2019-2020 | 74385 | 133438.43 |
| 13. | அரசு உதவி பெறும் நிறுவனங்கள் | 2018-2019 | 2019-2020 | 19406 | 305712.06 |
| 14. | அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகள் | 2018-2019 | 2019-2020 | 5498 | 14132.53 |
| 15. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 2016-2017 | 2017-2018 - 2020-2021 முடிய | 173123 | 46403.56 |

**தணிக்கைச் சான்று**

69. மானியம் பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்கு உட்பட்ட வாரியங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதி கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கைச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

**இதர பணிகள்**

70. அரசின் குறிப்பான ஆணையின்படி தற்போது 19 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையால் மேற்பார்வை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

1. மருத்துவக் கல்வித்துறை
2. மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை
3. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவ துறை
4. வேளாண்மைத் துறை
5. வேளாண்மை பொறியியல் துறை
6. புவியியல் சுரங்கத்துறை

7. வருவாய் நிர்வாகத் துறை
8. போக்குவரத்துத்துறை
9. கல்லூரி கல்வித்துறை
10. தொழில்நுட்ப கல்வித்துறை
11. சிறை மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை
12. காவல்துறை
13. சமூக நலத்துறை
14. அகதிகள் மறுவாழ்வுத்துறை
15. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
16. வனத்துறை
17. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
18. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
19. தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை

**தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை**

71. தணிக்கையின் போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் அவ்வப்போது நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைமைக்கும் மற்றும் அரசின் துறை செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

**தணிக்கைக் கட்டணம்**

72. உண்மைச் செலவினம் அல்லது சராசரி செலவுகளின் அடிப்படையில் தணிக்கை கட்டணத்திற்கான கேட்பு எழுப்பப்படுகிறது. 2020-2021-ஆம் ஆண்டிற்கு ரூ.213.61 இலட்சம் தணிக்கை கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்**

73. பல்வேறு தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட அரசுக்கு வருவாய் இழப்புகளை உருவாக்கும் இனங்களின் 4581 தணிக்கைத் தடைகள் நீக்கம் செய்யப்பட்டு ரூ.318.28 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**தணிக்கையாளர்களின் திறன் மேம்படுத்துதல்**

74. இத்துறையின் தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த அரசால் உருவாக்கப்பட்ட பயிற்சி மையத்தில் தணிக்கை நடைமுறை குறித்து மூன்று நாட்களுக்கு தணிக்கையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

75. **மின்ஆளுமை முயற்சிகள்**

- இத்துறைக்கான பிரத்யேகமான வலைத்தளம் உருவாக்கப்பட்டு வருகிறது.

- மின்னணுமயமாக்கும் முயற்சியின் முழுப்பயன்கள் அடைந்திடும் நோக்கில் இத்துறைக்கென தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு அலகு தோற்றுவிக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக இத்துறையின் 25 பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

## பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை


76. பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ தணிக்கைப் பணியினை மேற்கொள்ள, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை 1987 ஆம் ஆண்டு தனித்துறையாக உருவாக்கப்பட்டது.

77. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்த இத்துறை அரசாணை (நிலை) எண்.370, நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை, நாள் 22.11.2019 வாயிலாக இத்துறைக்கென அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைத் திறனான 333 பதவிகளைக் கொண்டு நிதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் தனித்துறையாக செயல்பட அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## பால் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு

78. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அடுக்கு அமைப்பாக, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்ட அளவிலான மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் (25), பிரதம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் (10335) மற்றும்

பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் (47) என செயல்பட்டு வருகின்றன.




## பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்

79. பால் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப்

பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது பால் கூட்டுறவுத் தணிக்கைத்துறையின் முதன்மைப் பணியாக உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி செயல்படுவதை தணிக்கை செய்வதனால் சங்க உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இத்துறை பொறுப்புடைமையுடன் இயங்கி வருகிறது. மேலும், அரசின் நிதியுதவி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

**அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைத்திறன்**

80. இத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட 333 பணியிடங்களில் கூட்டுறவுத் துறையிலிருந்து 297 பணியிடங்களும், ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறையிலிருந்து 2 பணியிடங்களும் மாற்றுப்பணியில் நிரப்பப்பட்டுள்ளன.

| **பணியிடத்தின் பெயர்** | **ஒப்பளிக்கப்பட்ட பணிநிலைத்திறன் எண்ணிக்கை** |
|---|---|
| இயக்குநர் | 1 |
| இணை இயக்குநர் | 1 |
| துணை இயக்குநர் ( கணக்கு ) | 1 |
| மண்டல துணை இயக்குநர் | 5 |
| கண்காணிப்பாளர் | 1 |
| உதவி இயக்குநர் | 59 |
| முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர் | 224 |
| இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் | 7 |
| அமைச்சுப்பணி | 9 |
| பொது சார்நிலைப்பணி | 8 |
| அடிப்படை பணி | 17 |
| **மொத்தம்** | **333** |

**பணிநிலைத்திறன் சீரமைப்பு**

81. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை நிரந்தர பணியமைப்புடன் தனித்துறையாக இயங்க தற்போதுள்ள பணியாளர்களின் பணிநிலைத் திறனை மாற்றி சீரமைத்து மற்றும் சிறப்பு விதிகள் உருவாக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**தணிக்கை முன்னேற்றம்**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

82. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் **2019-2020** தணிக்கையாண்டிற்கான தணிக்கை 10 அலகுகளிலும் நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், **2020-2021** ஆம் ஆண்டிற்கான தணிக்கைப்பணி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 9 அலகுகளில் துவங்கப்பட்டுள்ளது. தணிக்கைக்கு தேவையான நிதிநிலை அறிக்கைகள், பொதுப்பேரேடு, மற்றும் படிவம்-34 ல் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை வழங்கிட தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநரிடம் கோரப்பட்டுள்ளது. சட்டப்பூர்வ காலக் கெடுவிற்குள் இணையத்தின் 2020-2021-ஆம் ஆண்டு இறுதி தணிக்கையினை முடிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்**

83. **2018-2019** ஆம் ஆண்டில் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் தணிக்கை நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. புதிதாக துவங்கப்பட்ட திருப்பூர் மற்றும் நாமக்கல் ஒன்றியங்களின் தணிக்கை நடைபெற்று வருகிறது.

**2019-2020** ஆம் ஆண்டில் 20 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தணிக்கை நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நாமக்கல், தருமபுரி, தேனி, திருப்பூர், திருவண்ணாமலை ஆகிய புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தணிக்கை பணி நடைபெற்று வருகிறது. திருப்பூர் ஒன்றியத்தில் கணக்குப் புத்தகங்கள் முழுமையான வடிவத்தில் வழங்கப்படாததால் தணிக்கை தொடங்கப்படவில்லை.

**2020-2021** ஆம் ஆண்டிற்கு 20 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தணிக்கை துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

**பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை**

84. **2019-2020** ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 10081 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 9662 சங்கங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு, 8895 சங்கங்களுக்கு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. 767 சங்கங்களில் தணிக்கைச் சான்று வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**2020-2021** ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 10382 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 929 சங்கங்களில் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளின் தணிக்கைப்பணி முன்னேற்ற விவரம்:-

| வ. எண் | தணிக்கை ஆண்டு | மொத்தமுள்ள சங்கங்கள் | தணிக்கை முடிக்கப் -பட்டவை | தணிக்கைச் சான்று வழங்கப் -பட்டவை | தணிக்கை நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1 | 2015-2016 | 10785 | 10785 | 10785 | - |
| 2 | 2016-2017 | 10701 | 10701 | 10701 | - |
| 3 | 2017-2018 | 9947 | 9947 | 9947 | - |
| 4 | 2018-2019 | 9857 | 9817 | 9817 | 40 (புத்தகங்கள் எழுதப்பட வில்லை) |
| 5 | 2019-2020 | 10081 | 9662 | 8895 | 419 (புத்தகங்கள் எழுதப்பட வில்லை) |

**தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படைவிதிக் கட்டணம்**

85. 2020-2021ஆம் நிதியாண்டில் தணிக்கைக் கட்டணமாக 97.85 இலட்சமும் மற்றும் அடிப்படை விதி கட்டணமாக ரூ.145.65 இலட்சமும் பால் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு மொத்தம் ரூ.243.51 இலட்சம் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் (ஜுலை 2021 வரை) தணிக்கைக் கட்டணம் ரூ.18.55 இலட்சமும், அடிப்படைவிதி கட்டணம் ரூ.45.99 இலட்சமும் பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு மொத்தம் ரூ.64.54 இலட்சம் அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**தனியறிக்கை**

86. தணிக்கையில் காணப்படும் கடுங்குறைகள் மற்றும் நிதி சார்ந்த அனைத்து விவரங்களும் தனியறிக்கைகள் மூலம் இயக்குநர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை மற்றும் பால் வளத்துறை துணைப்பதிவாளர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக தொடர்புறுத்தப்படுகிறது.

**கடந்த 5 ஆண்டுகளில் தனியறிக்கைகளின் முன்னேற்ற விவரங்கள் பின்வருமாறு:**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| தணிக்கையாண்டு | தனியறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 2015-2016 | 1 | 48.42 |
| 2016-2017 | 1 | 8.82 |
| 2017-2018 | 1 | 239.10 |
| 2018-2019 | 6 | 3674.44 |
| 2019-2020 | 9 | 12076.06 |
| **மொத்தம்** | **18** | **16046.84** |

**மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| தணிக்கையாண்டு | தனியறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 2015-2016 | 6 | 287.21 |
| 2016-2017 | 8 | 234.39 |
| 2017-2018 | 10 | 618.20 |
| 2018-2019 | 20 | 8300.68 |
| 2019-2020 | 20 | 10028.12 |
| **மொத்தம்** | **64** | **19468.60** |

**தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| தணிக்கையாண்டு | தனியறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 2015-2016 | 284 | 438.76 |
| 2016-2017 | 400 | 1312.33 |
| 2017-2018 | 279 | 878.45 |
| 2018-2019 | 310 | 397.51 |
| 2019-2020 | 121 | 85.04 |
| **மொத்தம்** | **1394** | **3112.09** |

## பயிற்சி மற்றும் மேம்பாடு

87. பால் கூட்டுறவு தணிக்கைத்துறையின் தணிக்கையாளர்களுக்கு, துறை சார்ந்த அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்காக அரசின் நிதியுதவியுடன் ஒவ்வொரு ஆண்டும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## துறையின் புதிய முயற்சிகள்

88. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை சிறப்பாக செயல்படும் பொருட்டு பணிநிலைத்திறன் மறுசீரமைப்பு, பணியிடங்களுக்கு சிறப்பு விதிகள் ஏற்படுத்துதல், தணிக்கைக் கட்டணத்தை திருத்தியமைத்தல் மற்றும் தணிக்கையாளர்களின் பயன்பாட்டிற்கு தணிக்கை கையேடு தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## சிறுசேமிப்புத் துறை

89. அஞ்சலகங்களில் செயல்படுத்தப்படும் சேமிப்பு திட்டங்கள் சிறுசேமிப்பு திட்டங்கள் ஆகும். மாநிலத்தில் திரட்டப்படும் சிறுசேமிப்பு முதலீடுகளின் நிகர வசூலினை அந்த மாநிலத்திற்கே நீண்டகால கடனாக ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது. இத்தகைய கடன்களின் அதிக வட்டி விகிதம் காரணமாக, தமிழக அரசின் கோரிக்கையை ஏற்றும், சிறுசேமிப்புக் கடன் பெறுவதிலிருந்து, மாநிலத்திற்கு 2016-2017 ஆம் ஆண்டு முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### சிறுசேமிப்புத் திட்டங்கள்

90. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்றவகையில், பலவிதமான சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதத்தினை ஒவ்வொரு காலாண்டிற்கும் மாற்றியமைத்து மத்திய அரசு அறிவிப்பினை வெளியிடுகிறது.

91. தற்போது 01.04.2021 முதல் நடைமுறையில் உள்ள சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்கள் பின்வருமாறு. இத்தகவல்கள் யாவும் தற்போது சிறுசேமிப்புத் துறையின் இணையதளமான (www.tnsmallsavings.org)-இல் வெளியிடப்பட்டு அவ்வப்போது மாற்றங்களும் வெளியிடப்படுகின்றன.:-

| தொடர் எண் | திட்ட விவரம் | 01.04.2021 முதல் 30.09.2021 முடிய வட்டி விகிதங்கள் | வட்டி கூடுதல் கால இடைவெளி |
|---|---|---|---|
| 1 | அஞ்சலக சேமிப்பு கணக்கு (POSA) | 4.0 | ஆண்டுக்கு ஒருமுறை |
| 2 | **அஞ்சலக கால வைப்பு நிதி** | | |
| (அ) | 1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 5.5 | காலாண்டுக்கு ஒருமுறை |
| (ஆ) | 2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 5.5 | காலாண்டுக்கு ஒருமுறை |
| (இ) | 3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 5.5 | காலாண்டுக்கு ஒருமுறை |
| (ஈ) | 5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 6.7 | காலாண்டுக்கு ஒருமுறை |
| 3 | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD - 5 ஆண்டுகள்) | 5.8 | காலாண்டுக்கு ஒருமுறை |
| 4 | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS-5 ஆண்டுகள்) | 7.4 | காலாண்டுக்கு ஒருமுறை |
| 5 | அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம் (POMIS) | 6.6 (5 ஆண்டுகள்) | மாதத்திற்கு ஒருமுறை |
| 6 | தேசிய சேமிப்புப் பத்திரம் NSC VIII-வது வெளியீடு | 6.8 (5 ஆண்டுகள்) | ஆண்டுக்கு ஒருமுறை |
| 7 | பொது வருங்கால வைப்பு நிதித்திட்டம் / பொன் மகன் பொது வைப்பு நிதி (PPF-15 ஆண்டுகள்) | 7.1 ( ஒரு நிதியாண்டில் அதிக பட்சம் ரூ.1.5 இலட்சம் முதலீடு செய்யலாம் | ஆண்டுக்கு ஒருமுறை |
| 8 | கிஸான் விகாஸ் பத்திரம் (KVP) | 6.9 (124 மாதங்களில் முதிர்வடையும்) | ஆண்டுக்கு ஒருமுறை |
| 9 | செல்வ மகள் சேமிப்புத் திட்டம் (சுகன்யா சம்ரிதி கணக்கு வைப்புத் திட்டம்) | 7.6 | ஆண்டுக்கு ஒருமுறை |

**சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்**

92. சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக தமிழகத்தில் 2016-2017 முதல் 2020-2021 வரையிலான நிதியாண்டுகளில் தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி வசூல் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

**ரூபாய் கோடியில்**

| வ. எண் | ஆண்டு | நிகர இலக்கு | மொத்த வசூல் | முதிர்வு மற்றும் திரும்பப் பெறப்பட்ட தொகை | நிகர வசூல் |
|---|---|---|---|---|---|
| 1 | 2016 – 17 | - - | 20737.29 | 17227.19 | 3510.10 |
| 2 | 2017-18 | - - | 25257.16 | 17301.21 | 7955.95 |
| 3 | 2018-19 | -- | 31923.58 | 19511.08 | 12412.50 |
| 4 | 2019-20 | -- | 41195.23 | 23572.59 | 17622.64 |
| 5 | 2020-21 | -- | 41478.48 | 27421.02 | 14057.46 |

**முகவரமைப்பு**

93. சிறுசேமிப்புத் தொகையை திரட்டுவதற்காக மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இதில் மகளிர் முகவர் (MPKBY) திட்டத்தின்கீழ் மட்டும் அஞ்சலக தொடர் வைப்புத் திட்டத்திற்கு (PORD) முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது

குறிப்பிட்டத்தக்கது. தமிழ்நாடு முழுவதும் தற்பொழுது அதாவது 30.06.2021 வரை, மொத்தம் 27,499 பதிவு பெற்ற முகவர்கள் பணியாற்றி வருகின்றனர். அந்த விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண். | முகவர்களின் வகை | மொத்த முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் (SAS) | 7,060 |
| 2 | மகளிர் முகவர் திட்டம் (MPKBY) | 20,439 |
| **மொத்தம்** | | **27,499** |

## வெகுமதிகள்

94. சிறுசேமிப்புத் திட்டங்களின்கீழ் முகவர்கள் மூலமாக திரட்டப்படும் முதலீடுகளுக்கு ஒன்றிய அரசு முகவர்களுக்கு தரகுத் தொகை வழங்குகிறது. சிறுசேமிப்புத் முகவர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் (MPKBY) முகவர்களுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் நிலைமுகவர்களுக்கு (SAS) மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு ரொக்கப் பரிசுகள் மற்றும் கேடயங்கள் வழங்கி வருகின்றது.

95. தமிழகமெங்கும் சிக்கனம் மற்றும் சிறுசேமிப்புத் திட்டங்களில் சேமித்தல் ஆகிய இரண்டு பழக்கங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முதலீட்டாளர்கள் மற்றும் முகவர்களின் குறைகளை, இணையதளம் (www.tnsmallsavings.org) மூலமாக களைவதிலும், சிறுசேமிப்புத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் உலக சிக்கன நாள் விழாவின்போதும், மாணாக்கர்களிடையே சிறுசேமிப்பு தொடர்பான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனப் போட்டி மற்றும் நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறை மூலம் பரிசு அளிக்கப்படுகின்றது.

96. கடந்த நிதியாண்டுகளான 2017-2018 முதல் 2021-2022 முடிய ஒவ்வொரு ஆண்டும் ரூ.3.30 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விளம்பரம்**

97. சிறுசேமிப்புத் துறை, சென்னை மற்றும் மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் கலந்துகொண்டு, சிறுசேமிப்பு அரங்கு அமைத்தும், பொது மக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றது.

98. கடந்த ஒவ்வொரு நிதியாண்டுகளிலும், அரசால், ரூபாய் 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு கிராமங்களில் ஒவ்வொரு ஆண்டும் 250 நாடகங்கள் நடத்தப்பட்டன.

**தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB)**

99. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-இன் கீழ் திட்டங்களைக் கண்டறிதல், கருத்துருவாக்கல், முன்னுரிமை அளித்தல் மாநிலத்தில் செயல்படுவதற்கான பணிகளை மேற்கொள்ள சட்டரீதியான வழிவகைகளை உருவாக்குகிறது. இச்சட்டம், உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தக்கூடிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான திட்டதயாரிப்பு, கட்டமைப்பு, நிதியுதவி, செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான உகந்த சூழலை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012 விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், அரசு முகவரமைப்புகள் செயல்படுத்துகிற 500 கோடி ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கும் மற்றும் 10 கோடி ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட அனைத்து அரசு-தனியார் பங்கேற்புத் திட்டங்களுக்கும் பொருந்தும். தமிழ்நாடு உள்கட்டமைப்பு விதிகள் 2012 சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நிதிகளை நிருவகிக்கவும், அதிலிருந்து திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கவும் வழிமுறைகளை உருவாக்குகிறது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய ஒழுங்குமுறைகள் 2013-இன் கீழ் வாரியம் செயல்படுவதற்கான நடைமுறைகள் மற்றும் திட்ட

ஆவணங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-இன் கீழ் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாரியம் தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக தோற்றுவிக்கப்பட்ட முன்னோடி முகமையாகும். இவ்வாரியம் மாநிலத்தில் உட்கட்டமைப்பு வளர்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன், பொதுத்துறைகள் வாயிலாகவும் மற்றும் பொது-தனியர் பங்களிப்பு முறையின் வாயிலாகவும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வகை செய்கிறது.

- இவ்வாரியத்தின் தலைவராக முதலமைச்சரும் (அலுவல் வழி) மற்றும் துணைத் தலைவராக நிதி அமைச்சரும் (அலுவல் வழி) இருப்பர். இவ்வாரியத்தில் தலைமைச் செயலர் தலைமையில் நிர்வாகக் குழுவும், நிதித் துறை செயலர் தலைமையில் துணைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய சட்டம் 2012-இன் கீழ் திட்ட தயாரிப்பு நிதி மற்றும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி ஆகியவை திட்டங்கள் செயல்படுத்துவதை எளிதாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டங்களின் வடிவமைப்பு, மேம்பாடு, செயல்பாடு,

நிர்வாகம், மேலாண்மை ஆகியவற்றை எளிதாக்க நிதி உதவி அளிக்கிறது.

- திட்ட தயாரிப்பு நிதி ஆய்வுகள் நடத்துதல், நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களின் சேவைகளை அமர்த்துவது, சாத்தியக்கூறு ஆய்வுகள், விரிவான திட்ட ஆய்வுகள், திறன் மேம்பாடு, ஆராய்ச்சி போன்ற நோக்கங்களுக்காக நிதி உதவி அளிக்கிறது.

- **திட்ட தயாரிப்பு நிதியிலிருந்து நிதியளிக்கப்பட்ட முக்கிய திட்டங்கள்**

    - சென்னை மெட்ரோ இரயில் திட்டம்
    - தமிழ்நாடு ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சித் திட்டம்
    - அத்திக்கடவுஅவினாசி குடிநீர் வழங்கல் திட்டம்-
    - தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்
    - சில்ஹல்லா நீர் மின்நிலையத் திட்டம்
    - சென்னை கன்னியாகுமரி தொழில் பெருவழித்-தடம்
    - பேரூரில் நாளொன்றிற்கு மில்லியன் லிட்டர் 400 கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவுதல்
    - தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் திட்டம்

- தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரி 30 மருத்துவமனைகளை மேம்படுத்தும் திட்டம்

- **மேலும் பின்வரும் உள்கட்டமைப்பு திட்டங்கள் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் கண்டறியப்பட்டுள்ளன.**

    - சென்னை நிதி நுட்ப நகரம்
    - தமிழ்நாடு வணிக மையம், சென்னை
    - சென்னையில் பேருந்து முனையங்களை நவீனப்படுத்தும் திட்டம்
    - சென்னை இலகு இரயில் திட்டம்
    - சென்னை பெங்களூரு தொழில் - பெருவழித்தடத் திட்டம்
    - பணிபுரியும் மகளிர்க்கான தங்கும் விடுதிகள் திட்டம்
    - தொழிற்சாலை தேவைகளுக்கான கடல்நீர் சுத்திகரிப்புத் திட்டம், தூத்துக்குடி
    - ஒருங்கிணைந்த வாகன நிறுத்த மேலாண்மைத் திட்டம்.

## தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம்

100. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC), சொத்து மேலாண்மை நிறுவனமாக 2013ம் ஆண்டின் கம்பெனி சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. 49 சதவீதம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் மற்றும் 51 சதவீதம் நிதி நிறுவனங்களாலும் முதலீடு செய்யப்படுகிறது. இது சர்வதேச முதலீட்டாளர்களுக்கு, வணிக ரீதியாக சாத்தியமான மற்றும் குறிப்பிடத்தக்க துறைகளில், மாநில அரசின் நிதியில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் அதிக மூலதனத்தை அளிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி (Tamil Nadu Infrastructure Fund), தமிழ்நாடு உறைவிட நிதி (Tamil Nadu Shelter Fund) ஆகிய நிதியங்களை நிர்வகிக்கும் நிதி மேலாளராக செயல்படுகிறது. தவிர தமிழ்நாடு வளர் துறை விதை நிதி (Tamil Nadu Emerging Sector Seed Fund) என்ற புதிய பெயரில் தொடங்கப்பட உள்ளது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் 300 கோடி ரூபாயினை தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்திற்கு வழங்க இசைவளித்து 30 கோடி ரூபாயினை விடுவித்துள்ளது. இதுகாறும் இந்நிதியம் 830 கோடி ரூபாய் அளவிற்கு இசைவினைப் பெற்றுள்ளது.

101. தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டம் II (TNIPP-II)-ன்கீழ் ரூ.300 கோடி நிதியை முதல்-இழப்பு முதலீட்டு பிரிவில், ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) பங்களிப்பு செய்துள்ளது. தற்போது இந்தியாவிலுள்ள சில வங்கிகள் மற்றும் நிதி அமைப்புகளும் முதலீடுகள் செய்வதில் பங்களித்து வருகின்றன. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியங்களைத் தவிர கீழ்க்கண்ட இரண்டு நிதியங்களில் பெற்றுள்ள இசைவு விவரங்கள் பின்வருமாறு:

**தமிழ்நாடு உறைவிட நிதி (TNSF) வகை 1 (சமூக) மாற்று முதலீட்டு நிதியாகும்**

- மலிவு வீட்டு வசதி திட்டங்களில் முதலீடு செய்வதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களிடமிருந்து வளங்களை திரட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இந்நிதிக்கு தமிழக அரசு 150 கோடி ரூபாய் நிதியும் உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி தலா 35 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவியும் அளிக்க உறுதி செய்துள்ளன.

**தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை நிதி (Tamil Nadu Emerging Sector Seed Fund (TNESSF) வகை 1 (ஆதார முதலீடு) நிதியாக உருவாக்கப்பட உள்ளது.**

- தமிழக அரசால் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய துறைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் ஆரம்ப கால மற்றும் ஆதார மூலதனத்தில் முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது ஆரம்ப நிலையில் உள்ளது.

102. உலக வங்கி, தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 35 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.245 கோடி) வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும், 35 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ. 256 கோடி) நிதி முதலீடு ஆசிய மேம்பாட்டு வங்கியிடம் (Asian Development Bank) பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தில் பங்குதாரர் மற்றும் எதிர்பார்க்கப்படும் பங்குதாரர்களாகிய தேசிய வீட்டுவசதி வங்கி (National Housing Bank) மற்றும் ஹட்கோ (HUDCO) நிறுவனம் ஆகியவை ஒவ்வொன்றும் தலா ரூ.500 கோடி முதலீடு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இந்நிதியம்,

மலிவுவிலை வீட்டுவசதித் திட்டங்களில் முதலீடு செய்ய ரூ.3000 கோடி நிதியை திரட்ட குறிக்கோள் கொண்டுள்ளது.

## புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - 2021

103. புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டம் 30.06.2021 க்கு பிறகு மேலும் நான்காண்டிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவக் காப்பீடு திட்டம்-2021, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் செயல்படுத்தப்படுகிறது. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள், மாநில அரசு நிறுவனங்கள் (விரும்புவன மட்டும்) ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சைக்காக தொகுப்பாண்டில் ஐந்து இலட்சம் ரூபாய் மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் காப்பீட்டு கட்டணமாக அரசு ஊழியரிடமிருந்து ரூ.300 (ரூ.295 காப்பீட்டு சந்தா + ரூ.5 சிறப்பின நோய்கள் மற்றும் சூழ்நிலைகளில் ஏற்படும் எதிர்பாரா செலவுகளுக்காக நிதிய மூலதனம் இதன் மூலம் ரூ.20.00 லட்சம் வரை மருத்துவ உதவி பெறலாம்) வீதம் அவர்களது மாதாந்திர ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

104. இப்புதிய திட்டத்தில், கீழ்காணும் நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற நிதி உச்சவரம்பு 10.00 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

1) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்

2) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை

3) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை

4) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் பல்வகைப்பட்ட எலும்பு முறிவு

5) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசிம்ஸ் மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி

6) தீயினால் ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சை.

105. இத்திட்டத்தின் கீழ் விபத்தினால் ஏற்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்கைகளுக்கு அங்கீகரிக்கப்படாத (Non Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 203 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள்

மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், பெங்களூரு மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள 1169 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில், கட்டணமில்லா மருத்துவ சிகிச்சைகள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 01.07.2016 முதல் 30.06.2021 வரையிலான நான்காண்டுகளில் 2,48,716 பயனாளிகள் 1033.46 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர். புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2021 இன் கீழ் 01.07.2021 முதல் 31.08.2021 வரை 10,058 பயனாளிகள் 41.67 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

106. இது தவிர தற்போது கோவிட்-19 க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மேற்கொள்ள ரூ.5.00 கோடி நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இதுநாள் வரை ரூ.30 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2018**

107. ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014, 01.07.2014 முதல்

அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 01.07.2018 முதல் 30.06.2022 முடிய, நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றை பெற உச்சவரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

108. இப்புதியத் திட்டத்தில், ஓய்வூதியதாரர்களைச் சார்ந்துள்ள மகன் / திருமணமாகாத மகள் வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராகவோ அல்லது மனநலமற்றவராகவோ இருந்தால், மாற்றுத்திறனாளியாக இருந்து மற்றும் பொருளீட்ட இயலாதவராக இருந்தாலோ, மணமாகாத/விவாகரத்து பெற்ற/ விதவை மகள்கள் ஆகியோர் இப்பயனைப் பெற, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, நீட்டிக்கப்பட்டுள்ளது.

109. இப்புதிய திட்டத்தில் கீழ்க்காணும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

1) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்

2) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை

3) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை

4) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் எலும்பு முறிவுகள்

5) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசம் (Aneurysm) மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Angioplasty)

6) தீக்காயங்களுக்கான சிகிச்சை.

110. இப்புதியத் திட்டத்தில், திடீரென்று எதிர்பாராத விதமாக, அவசர சிகிச்சை தேவைப்படுகின்ற மற்றும் விபத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத (Non Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 114 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் பணச் செலவின்றி

மேற்கொள்வதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், புதுதில்லி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள 1168 அங்கீகரிக்கப்பட்ட (Network) மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 01.07.2018 முதல் 30.06.2022 வரையிலான நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டு கட்டணமாக ஒரு ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரருக்கு 3,800 ரூபாய் வீதம் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு சேவை வரிகளுடன் அரசு ஆரம்பத்தில் செலுத்தும். இதற்கென ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் 350 ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்திலிருந்து ஜூலை மாதம் 2018 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது.

111. 01.07.2014 முதல் 30.06.2018 வரையிலான நான்காண்டுகளில் 2,01,285 பயனாளிகள் 578.01 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு 01.07.2018 முதல் 31.08.2021 வரை 1,85,266 பயனாளிகள் 720.24 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

112. மேலும், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்

கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள்/ நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து அந்தந்த நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அந்த நிறுவனங்களால் கூடுதலாகச் செலுத்தப்படும் தொகையினை மாநில அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்கொள்ளாமல் அந்த நிறுவனங்களால் செலுத்தப்படும் நிலையில், அவர்கள் இத்திட்டத்தினை நீட்டித்துக்கொள்ள அரசினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

113. மேலும், தற்போது கோவிட்-19க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மேற்கொள்ள ரூ. 2.50 கோடி நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரை ரூ.15.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்
துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.